கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களாகவே கூட சட்டத்தை கொண்டு வரவிருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்டத்தை நிராகரிப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/74) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

7. அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, "இன்றைய நிகழ்ச்சி நிரலிலுள்ள 3-வது இனத்திற்குப் பிறகு 9-வது இனத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஈ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1974)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள்